




கள்ளக்குறிச்சி தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பள்ளி மாணவிகளுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பாராட்டுச் சான்றிதழ்களை 14.11.2024 – வியாழக்கிழமை அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் உள்ளார்கள்.



அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 71வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் பள்ளிகளில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம்

# ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு முடிவுற்றப் பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் !

புதுக்கோட்டை, நவ. 19 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 13.11.2024 அன்று திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்,

அந்த வகையில் ஊரகப் பகுதிகளுக்கு தேவையான, குடிநீர் வசதி, சுகாதார வசதி, மின் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்ற ப்பட்டு வருகிறது. அதன்படி அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சியில், ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.18 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினையும், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.86 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தார்ச் சாலையினையும், ரூ.39.95 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி செயலக அலுவலகக் கட்டடத்தினையும், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.23 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தார்ச் சாலையினையும் மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சான்விடுதி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.28.50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினையும், வெண்ணாவல்குடி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி பகுதியில், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆழ்துளை குழாய் கிணறு அமைப்பினையும், கீழாத்தூர் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின் மாற்றியினையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், நாட்டுமங்களம் ஊராட்சி, அங்காள பரமேஸ்வரி கோவில் அருகில், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கலையரங்கம் கட்டடப் பணியினையும், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் ரூ.4.22 கோடி மதிப்பீட்டில் 9.56 கிலோ மீட்டர் தூரம் அமைக்கப்படவுள்ள தார்ச் சாலை பணியினையும் மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வெண்ணாவல்குடி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி பகுதியில், ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உணவுக்கூடம் கட்டடப் பணியினையும், கரும்பிரான்கோட்டை ஊராட்சி, மேலக்கரும்பிரான்கோட்டை கிராமத்தில், ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினையும் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத் திட வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஒன்றியக்குழுத் தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), ஒன்றியச் செயலாளர்கள் டி. தங்கமணி, கே. எஸ்.ரவி, மாஞ்சான்விடுதி ஊராட்சி மன்றத் தலைவர் சுரேஷ் கண்ணன் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### கரப்பான் பூச்சியை போன்று ஊர்ந்து சென்று பதவி வாங்கிய

# எடப்பாடி பழனிசாமிக்கு சவால் விடுவதற்கான யோக்கியதை கிடையாது!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ. 19 -

புதுக்கோட்டையில் செய்தியாளர்களை சந்தித்த சட்டத்துறை அமைச்சர் கூறுகையில்

எடப்பாடி பழனிச்சாமி சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் வீண் குற்றசாட்டுகளை தவிர வேறு ஒன்றும் இல்லை, அவர் மீதுஉள்ளகுற்றச்சாட்டுகள் விசாரணைக்கு வரும் போது தெரியவரும். அவர் ஒன்றும் நிரபராதி அல்ல அவர் எந்த தவறும் செய்யாதவரும் கிடையாது, அவர் தி.மு.க. மீது பழி சுமத்துவதற்கு எந்த வித தகுதியும் உரிமையும் கிடையாது.

தி.மு.க.வில் உள்ள அமைச்சர்களோ வேறு யாரோ எந்த தவறும் செய்யவில்லை. நிச்சயமாக எந்த சவாலையும் சந்திப்பதற்கு தயாராக இருக்கக்கூடியவர்கள் தான் தி.மு.க.வின் அமைச்சர்கள்.

நீதிமன்றத்திற்கு சென்று வெற்றி பெற்று வருவோமே தவிர நீதிமன் றத்தை சந்திக்க அஞ்சுபவர்கள் அல்ல, எடப்பாடி பழனிச்சாமி ஒரு முறை நீதிமன்றத்திற்கு சென்றால் தெரியும் எவ்வளவு சிரமப்பட போகிறார் என்று. அதை அவர் மனதில் வைத்துக்கொண்டு பேச வேண்டும்.



காட்டமாக கரப்பான் பூச்சியை போன்று ஊர்ந்து சென்று பதவியை வாங்கிய எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமாக கேள்வி கேட்கின்ற யோகிதையோ அருகதையோ தகுதியோ கிடையாது. அவர் எப்படி பதவிக்கு வந்தார் என்பது தெரியும். வளைந்து நெளிந்து பாம்பு போல் ஊர்ந்து சென்று பதவி வாங்கியவர். அவர் தைரியசாலி அல்ல யாரையும் தைரியமாக எதிர்கொண்டு பதவி வாங்கவில்லை. கெஞ்சி தான் பதவி வாங்கினார். அவருக்கு சவால் விடுவதற்கான யோக்கியதை கிடையாது. அவர்களிடம் சவாலுக்கு முதலமைச்சர் அல்ல துணை முதலமைச்சர் பதில் கூறுகிறார் என்றால் சந்திக்க வேண்டியது தானே. ஒரே மேடையில் விவாதிக்க தயாராக இருக்கிறேன் என்று துணை முதல மைச்சர் கூறிய பிறகு அந்த சவாலை எடப்பாடி பழனிச்சாமி சந்திக்க வேண்டியது தானே.

பாதிக்கப்பட்ட நபர் மருத்துவரை தாக்கியுள்ளார் . மருத்துவர் தாக்கப்படக் கூடாது என்பதுதான் சட்டம். மருத்துவர் கூறிய பாதுகாப்புக்கு இருக்கும் சட்டத்தை வைத்து நிச்சயமாக உரிய நடவடிக்கையை எடுத்திருக்கின்றோம். உரிய சட்டங்கள் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2021 ஆக இருக்கட்டும் 2024 நாடாளுமன்ற தேர்தலாக இருக்கட்டும் வலுவான கூட்டணி அமைப்பேன் என்று தான் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்திருந்தார். ஆனால் அவரால் வலுவான கூட்டணி அமைக்க முடிய வில்லை. அதுதான் அவருக்கு 2026 இன் நிலைமையும், 2024 இல் முடியாதது 2026ல்லும் முடியாது. அதற்கான வாய்ப்பு நிச்சயம் கிடையாது.

அனைவருமே முதலமைச்சராக வரவேண்டும் என்ற கனவோடு பலர் வந்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் நாற்காலிக்கு பலர் வந்தாலும் இந்த நாற்காலியை விடாப்படியாக கெட்டியாக எங்களது முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிடித்துக் கொள்வார் அதை யாராலும் தடுக்க முடியாது. அவரை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

ஆதாரங்கள் அடிப்படையில் அமலாக்க துறையினர் நடவடிக்கை எடுத்தால் எதுவும் செய்ய முடியாது ஆனால் ஆதாரம் இல்லாமல் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டால் நீதிமன்றம் நிச்சயம் நல்ல விளக்கங்களை தரும். அமலாக்கத் துறையைப் பற்றியோ வருமானவரி துறையை பற்றியோ கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது உச்ச நீதி மன்றமும் உயர்நீதி மன்றமும் பல்வேறு வழிகாட்டுதல்களை காட்டுகின்றன. அதைப்பற்றி அஞ்ச வேண்டிய அவசியம் கிடையாது.

யார் யாரோட கூட்டணி போனாலும் எங்களுக்கு கவலை இல்லை எங்கள் கூட்டணி வலுவாக உள்ளது நாங்கள் உறுதியாக உள்ளோம். நாங்கள் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்கவில்லை. கூட்டணி உள்ளவர்கள் எங்களோடு அன்போடு இருக்கிறார்கள் அந்த நட்பு தொடரும்.

கூட்டணியில் இருப்பவர்கள் விமர்சிப்பது இயற்கை தான். ஆனால் விமர்சிப்பதற்கும் கூட்டணிக்கும் எந்த ஒரு பிரச்சனையும் கிடையாது. கூட்டணியில் உள்ள அனைவரும் மு.க.ஸ்டாலின் தலைமையை ஏற்றுக் கொள்கிறோம் என்று வந்தவர்கள் தான். யாரும் அவரது தலைமையை ஏற்க வில்லை என்று யாரும் சொல்லவில்லை, மறுக்க வில்லை. நாங்கள் அனைவரையும் சுதந்திரமாக நடத்துகின்ற கட்சி தி.மு.க. சமத்துவம் எங்கள் கொள்கை எல்லோரையும் சமமாக நடத்துபவர் தான் மு.க.ஸ்டாலின் அன்போடு அரவணைத்து செல்பவர் தான் முதலமைச்சர் யாரையும் அடிமைப்படுத்த வேண்டிய எண்ணம் கிடையாது அவசியமும் கிடையாது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியில் கூறினார்.

# ஓமான் தி.மு.க. அயலக அணி சார்பில் முப்பெரும் விழா!

## எம். எஸ்.தரணிவேந்தன் எம்.பி. – இறையன்பன் குத்தூஸ் பங்கேற்பு!

ஓமன், நவ. 19 -

ஓமான் திமுக அயலக அணி சார்பில் கழக முப்பெரும் விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழக பவள விழா மிக விமரிசையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

ஓமான் திமுக செயலாளர் பி.கே. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநிலச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் டாக்டர் இறையன்பன் குத்தூஸ் கலந்து கொண்டு கழக கொள்கை பாடல்கள் இசை நிகழ்ச்சியினை தந்து சிறப்புரையாற்றினார்.

ஓமன் திமுக செயலாளர் பி.கே.சிவகுமார் அனைவரையும் வரவேற்று பேசினார். அவைத் தலைவர் ஆர். பாலமுருகன் வாழ்த்துரை வழங்கினார். கழகத்தின் பொருளாளர் சிவ செந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி கழகத்தின் பல்வேறு வரலாற்று செய்திகளை அனைவருக்கும் தெரியும் வண்ணம் உரையாற்றினார்.

கழகத்தின் தலைவர் மற்றும் முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க குழந்தைகள் பங்கு கொண்ட ஓவியப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், மற்றும் திருக்குறள் ஒப்பிவித்தல் போட்டிகள் நடத்தப்பட்டு அனைவருக்கும் ஓமான் திமுக சார்பில் சிறப்பு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர்களுக்கு ஓமான் திமுக சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் புரவலர் அப்துல் சலாம், பர்ஷாத், நிர்வாக குழு உறுப்பினர்கள் அன்பில் சிவா, பாக்கியராஜ், தினேஷ் ராஜா, வி.என். ராஜன் மருத்துவர் சென்பாலன், மக்கீன் அயூப்கான், ரவிசங்கர் திருமாவளவன், கருணாநிதி, மாணிக்கவேல், தங்கதுரை, மகளிர் அணியைச் சார்ந்த தமிழரசி,டெசிமா பானு, உமா மகேஸ்வரி, ரேவதி மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் ஓமான் திமுக பல்வேறு அணியைச் சார்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முகமது பாரூக் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய மேல்நிலைப்பள்ளியில் வாக்காளர் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல் பணியினை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.


